பொதுத்தமிழ்-பகுதி-அ-இலக்கணம்

அலகு - 16

# விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்

## வினா, விடை வகைகள், பொருள்கோள்

பல்வேறு சூழல்களில் வினாக்கள் வினவுகிறோம்; விடைகள் கூறுகிறோம். மொழியின் வளர்ச்சி என்பது வினவுவதிலும் விடையளிப்பதிலும் கூட இருக்கிறது. அவற்றைப் பற்றி நன்னூலார் விளக்கியிருக்கிறார்.

## வினாவகை

அறிவினா, அறியா வினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா என்று வினா ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| அறிவினா | தான் விடை அறிந்திருந்தும், அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதை அறியும் பொருட்டு வினவுவது. | மாணவரிடம், ‘இந்தக் கவிதையின் பொருள் யாது?’ என்று ஆசிரியர் கேட்டல். |
| அறியா வினா | தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்வதற்காக வினவுவது. | ஆசிரியரிடம், ‘இந்தக் கவிதையின் பொருள் யாது?’ என்று மாணவர் கேட்டல். |
| ஐய வினா | ஐயம் நீங்கித் தெளிவு பெறுவதற்காகக் கேட்கப்படுவது. | ‘இச்செயலைச் செய்தது மங்கையா? மணிமேகலையா?’ என வினவுதல். |
| கொளல் வினா | தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுவது. | ‘ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?’ என்று நூலகரிடம் வினவுதல். |
| கொடை | பிறருக்கு ஒரு பொருளைக் | ‘என்னிடம் பாரதிதாசன் |

| | | |
|---|---|---|
| வினா | கொடுத்து உதவும் பொருட்டு வினவுவது. | கவிதைகள் இரண்டு படிகள் உள்ளன. உன்னிடம் பாரதிதாசனின் கவிதைகள் இருக்கிறதா?' என்று கொடுப்பதற்காக வினவுதல். |
| ஏவல் வினா | ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுதற் பொருட்டு வினவுவது. | "வீட்டில் தக்காளி இல்லை. நீ கடைக்குச் செல்கிறாயா? என்று அக்கா தம் பியிடம் வினவி வேலையைச் சொல்லுதல். |

**விடைவகை**

சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, வினா எதிர் வினாதல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை என்று விடை எட்டு வகைப்படும்.

முதல் மூன்று வகையும் நேரடி விடைகளாக இருப்பதால் வெளிப்படை விடைகள் எனவும் அடுத்த ஐந்து விடைகளும் குறிப்பாக இருப்பதால் குறிப்பு விடைகள் எனவும் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| சுட்டு விடை | சுட்டிக் கூறும் விடை | 'கடைத்தெரு எங்குள்ள து?' என்ற வினாவிற்கு, 'இப்பக்கத்தில் உள்ள து' எனக் கூறல். |
| மறை விடை | மறுத்துக் கூறும் விடை | 'கடைக்குப் போவா யா?' என்ற கேள்விக்குப் 'போகமாட்டேன்' என மறுத்துக் கூறல். |
| நேர் விடை | உடன்பட்டுக் கூறும் விடை | 'கடைக்குப் போவா யா?' என்ற கேள்விக்குப் 'போவேன்' என்று |

| | | |
|---|---|---|
| | | உடன்பட்டுக் கூறல். |
| ஏவல் விடை | மாட்டேன் என்று மறுப்பதை ஏவுதலாகக் கூறும் விடை. | இது செய்வாயா?” என்று வினவியபோது, “நீயே செய்”என்று ஏவிக் கூறுவது |
| வினா எதிர் வினாதல் விடை | வினாவிற்கு விடையாக இன்னொரு வினாவைக் கேட்பது. | ‘என்னுடன் ஊருக்கு வருவாயா?’ என்ற வினாவிற்கு ‘வராமல் இருப்பேனா?’ என்று கூறுவது. |
| உற்றது உரைத்தல் விடை | வினாவிற்கு விடையாக ஏற்கெனவே நேர்ந்ததைக் கூறல். | ‘நீ விளையாடவில்லையா?’ என்ற வினாவிற்குக் ‘கால் வலிக்கிறது’ என்று உற்றதை உரைப்பது. |
| உறுவது கூறல் விடை | வினாவிற்கு விடையாக இனிமேல் நேர்வதைக் கூறல். | ‘நீ விளையாடவில்லையா?’ என்ற வினாவிற்குக் ‘கால் வலிக்கும்’ என்று உறுவதை உரைப்பது. |
| இனமொழி விடை | வினாவிற்கு விடையாக இனமான மற்றொன்றை விடையாகக் கூறல். | “உனக்குக் கதை எழுதத் தெ ரியுமா?” என்ற வினாவிற்குக் “கட்டுரை எழுதத் தெரியும்” என்று கூறுவது |

**பொருள்கோள்**

செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்குப் ‘பொருள்கோள்’ என்று பெயர். பொருள்கோள் எட்டு வகைப்படும்.

அவை ஆற்றுநீர்ப் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள், நிரல்நிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள், தாப் பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள் ஆகியன. இவற்றுள் ஆற்றுநீர்ப் பொருள்கோள், நிரல் நிறைப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஆகியவற்றை அறிந்து கொள்வோம்.

**1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்**

எ.கா. ‘சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே ’. – சீவகசிந்தாமணி

நெற்பயிர், கருவுற்ற பச்சைப் பாம்பின் வடிவம்போல் கருக்கொண்டு, பின்பு கதிர்விட்டு, செல்வம் சேர்ந்தவுடன் பண்பற்றமக்கள் பணிவின்றித் தலை நிமிர்ந்து நிற்பதுபோல் குத்திட்டு நின்று, முடிவில் கதிர் முற்றியவுடன் கற்றவர்கள் வணங்குதல் போல் வளைந்து காய்த்தன.

‘நெல்’ என்னும் எழுவா ய் அதன் தொழில்களான இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்களைப் பெற்றுக் ‘காய்த்தவே’ என்னும் பயனிலையைக் கொண்டு முடிந்தது.

பாடலின் தொடக்கம்முதல் முடிவுவரை ஆற்றுநீரின் போக்கைப் போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்ததால் இது ‘ஆற்றுநீர்ப் பொருள்கோள்’ ஆகும்.

‘மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும் அஃது யாற்றுப் புனலே.’ -நன்னூல்: 412

## 2. நிரல்நிறைப் பொருள்கோள்

ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் நிரல்நிறையாக (வரிசையாக) அமைந்து வருவது 'நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும்.

இது முறை நிரல்நிறைப் பொருள்கோள், எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் என இருவகைப்படும்.

### (அ) முறை நிரல்நிறைப் பொருள்கோள்

செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச் சொற்களை வரிசையாக நிறுத்தி, அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் 'முறை நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும்.

எ.கா. 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது'. -குறள்: 45

இக்குறளில் அன்பு, அறன் என்ற இரு சொற்களை வரிசைப்படுத்தி, அவற்றிற்குரிய விளைவுகளாக பண்பு, பயன் என்று வரிசைப்படுத்தி உள்ளார். அவற்றை இல்வாழ்க்கையின் பண்பு, அன்பு என்றும் அதன் பயன், அறன் என்றும் பொருள்கொள்ள வேண்டும். எனவே, அன்புக்குப் பண்பும் அறத்துக்குப் பயனும் பயனிலைகளாக – நிரல்நிறையாக – நிறுத்திப் பொருள்கொள்வதால், இப்பாடல் 'முறை நிரல்நிறைப் பொருள்கோள்' எனப்படும்.

### (ஆ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் 'எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும்.

எ.கா. 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர் .' -குறள்: 410

இக்குறளில் முதல் அடியில் விலங்கு, மக்கள் என்று எழுவாய்களை வரிசைப்படுத்திவிட்டு, அடுத்த அடியில் பயனிலைகளாகக் கற்றார், கல்லாதார் (ஏனையவர் ) என வரிசைப்படுத்தியுள்ளார். அவற்றைக் கற்றார் மக்கள் என்றும், கல்லாத ஏனையவர் விலங்குகள் என்றும் எதிர் எதிராகக் கொண்டு பொருள்கொள்ள வேண்டும். எனவே, இக்குறள் 'எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும். -நன்னூல்: 414.

**3. கொண்டுகூட்டுப் பொருள்கோள்**

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோளாகும்.

எ.கா. ஆலத்து மேல குவளை குளத்துள

வாலின் நெடிய குரங்கு. - மயிலைநாதர் உரை

மேற்கண்ட பாடலில் ஆலத்து மேல் குவளை என்றும் குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள் கொண்டால் பொருத்தமற்றதா கிவிடும். இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை ஸ்ரீ என்று கருத்தைக் கொண்டு அங்குமிங்கும் கொண்டு பொருள்கோள் அமைந்திருப்பதால் இது கொண்டுகூட்டுப் பொருள்கோள் எனப்படும்

யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை

ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே -நன்னூல்: 417

**வினா, விடைவகைகள், ஒருபொருட் பன்மொழி**

**வினா வகை**

என்ன? எப்படி? எங்கு? ஏன்? என வினாமேல் வினாவைக் கேட்டு விடையறிய விரும்புகின்றவனே சிறந்த அறிவாளியாக ஆகமுடியும் என்று சாக்கரடிசும், தந்தை பெரியாரும் கூறுவர். வினா அறுவகைப்படும். அவை: அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடைவினா, ஏவல்வினா என்பன.

**1. அறிவினா**

தான் ஒரு பொருளை நன்கறிந்திருந்தும் அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா என்பதனை அறியும்பொருட்டு வினாவப்படும் வினா அறிவினா.

(எ-டு) திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனிடம் வினவுவது.

**2. அறியாவினா**

தான் அறியாத ஒரு பொருளை அறிந்துகொள்வதற்காகப் பிறரிடம் வினவுவது; அறியாவினா.

(எ-டு) எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியன எவை? என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது.

**3. ஐயவினா**

தனக்கு ஐயமாக இருக்கின்ற ஒருபொருள் குறித்து, ஐயத்தினைப் போக்கிக் கொள்வதற்காக வினவப்படும் வினா, ஐயவினா.

(எ-டு) அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ?

**4. கொளல்வினா**

தான் ஒரு பொருளை வாங்கிக்கொள்ளும்பொருட்டுக் கடைக்காரரிடம் வினவும் வினா, கொளல்வினா.

(எ-டு) பருப்பு உள்ளதா? என வணிகரிடம் வினவும் வினா.

**5. கொடைவினா**

தான் ஒரு பொருளைக் கொடுப்பதற்காக, அப்பொருள் இருத்தலைப்பற்றிப் பிறரிடம் வினவுவது, கொடைவினா.

(எ-டு) மாணவர்களே! உங்களுக்குச் சீருடை இல்லையோ ?

**6. ஏவல்வினா**

ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவும் வினா, ஏவல் வினா. (எ-டு) மனப்பாடச் செய்யுளைப் படித்தாயா?

முருகா சாப்பிட்டாயா?

( இவை படி, சாப்பிடு என்று ஏவல் பொருளைத் தருகின்றன)

அறிவு, அறியாமை, ஐயுறல், கொளல், கொடை,
ஏவல் தரும் வினா, ஆறும் இழுக்கார். -நன்னூல், 385.

**விடை வகை**

வினாவிற்கு ஏற்ப விடையளிப்பதுதான் மொழிநடையின் சிறப்பு.

'தேர்வு, நாளை நடைபெறுமா?' எனக் கேட்ட ஒருவனிடம், 'என் தங்கை ஏழாம் வகுப்பில் படிக்கிறாள்' எனக் கூறுவது தவறு. வினாவும் விடையும் பிழையின்றி அமைதலே முறை.

இறை, செப்பு, பதில் என்பன விடையின் வேறுபெயர்கள். விடை எண்வகைப்படும். அவை: சுட்டு, மறை, நேர், ஏவல், வினாஎதிர்வினாதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இனமொழி என்பன.

**1. சுட்டுவிடை**

"சென்னைக்கு வழி யாது?" என்று வினவினால்,

'இது' என்பதுபோலச் சுட்டிக் கூறும் விடை, சுட்டுவிடை.

**2. மறைவிடை (எதிர்மறுத்துக் கூறல் விடை)**

"இது செய்வாயா?" என்று வினவியபோது, செய்யேன் என்பதுபோல எதிர்மறுத்துக் கூறும் விடை, எதிர்மறைவிடை.

**3. நேர்விடை (உடன்பட்டுக் கூறுதல்)**

"இது செய்வாயா?" என்று வினவியபோது, செய்வேன் என்று உடன்பட்டுக் கூறும் விடை, நேர்விடை.

**4. ஏவல்விடை**

'இது செய்வாயா?" என்று வினவியபோது, 'நீயே செய்' என்று ஏவிக்கூறுவது ஏவல்விடை.

**5. வினாஎதிர்வினாதல்விடை**

"இது செய்வாயா ?" என்று வினவியபோது, 'செய்யாமலிருப்பேனோ?' என்று வினாவையே விடையாகக் கூறுவது, வினாஎதிர்வினாதல்விடை.

**6. உற்றதுரைத்தல்விடை**

"இது செய்வாயா ?" என்று வினவியபோது, 'உடம்பு நொந்தது' என்று தனக்கு உற்றதனை விடையாகக் கூறுவது, உற்றதுரைத்தல்விடை.

**7. உறுவதுகூறல்விடை**

"செய்வாயா?" என்னும் வினாவிற்குக் 'கை வலிக்கும்' எனத் தனக்கு வரப்போவதனை விடையாகக் கூறுவது, உறுவதுகூறல்விடை.

**8. இனமொழிவிடை**

"ஆடுவாயா?" என்று வினவியபோது, 'பாடுவேன்' என ஆடுவதற்கு இனமான பாடுவதனை விடையாகக் கூறுவது, இனமொழிவிடை..

சுட்டு, மறை, நேர் ஆகிய மூன்றும் வெளிப்படை. ஏவல், வினா எதிர்வினாதல், உற்றதுஉரைத்தல், உறுவதுகூறல், இனமொழி ஆகிய ஐந்தும் வினாக்களுக்கு உரிய விடையைக் குறிப்பால் உணர்த்துவன.

**ஒருபொருட்பன்மொழி**

1. **திருமால் குன்றம் உயர்ந்தோங்கி நிற்கிறது.**
2. **அந்த ஏழைக் குழந்தையின் கண்கள் குழிந்தாழ்ந்து காணப்படுகின்றன.**

இவ்விரு தொடர்களிலும் ஒருபொருள் குறித்துத் தொடர்ந்துவரும் இருசொற்கள் உள்ளன. அவை உயர்ந்தோங்கிய, குழிந்தாழ்ந்து என்பவை. உயர்ந்து, ஓங்கி ஆகிய இரு சொற்களும், உயர்ந்த என்னும் ஒரே பொருளிலும், குழிந்து, ஆழ்ந்து என்பவை குழிந்து என்னும் ஒரே பொருளிலும் வருகின்றன.

ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது, ஒருபொருட் பன்மொழியாகும்.

(எ-டு)

1. நடுமையம்.
2. மீமிசை ஞாயிறு.

என்னும் தொடர்களில் நடுப்பகுதி என்னும் ஒரே பொருளை உணர்த்தும் நடு, மையம் என்னும் இருசொற்களும், மேற்பகுதி என்னும் பொருளைத் தரும் மீ, மிசை என்னும் இருசொற்களும் இணைந்து வந்து ஒரே பொருளை உணர்த்தியுள்ளன.